உ

சிவமயம்



# அமரர் ஆறுமுகம் இராசரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த


## நினைவு மலர்

13.12.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம்

01.10.1928

மறைவு

13.11.2015


# அமரர் ஆறுமுகம் இராசரத்தினம்

## அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
ஏகதந்தாய வித்மஹே! வக்ரதுண்டாய தீமஹி
தந்நோ தந்தி ப்ரசோதயாத்

பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டார் மாணிக்க விநாயகர்



திரு.ஆறுமுகம் இராசரத்தினம் அவர்களுக்கு
இலண்டனில் உள்ள [illegible] மாநகரசபை மண்டபத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தந்தையாரின் வாழ்க்கை வரலாறு

எமது பாசமிகு தந்தையார் திரு. ஆறுமுகம் இராசரத்தினம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மிகவும் சுருக்கமாக தங்கள் அனைவருக்கும் அர்ப்பணிக்கிறோம்.

திரு. இராசரத்தினம் அவர்களின் தாயாரின் பெயர் மருதப்பா செல்லாச்சி. தந்தையாரின் பெயர் இளையதம்பி ஆறுமுகம். இவருடன் பிறந்த ஒரே ஒரு சகோதரன் ஆறுமுகம் குணரத்தினம் ஆவார். இவ்விருவரும் இராம-லஷ்மணன் போல வாழ்ந்தார்கள் என்று மக்கள் கூறுவதுண்டு.

திரு. இராசரத்தினம் அவர்கள் 1928ம் ஆண்டு பத்தாம் மாதம் முதலாம் திகதி அன்று இலங்கையின் கோயம்புத்தூர் என்றழைக்கப்படும் வாழை முதலாம் தோட்டங்கள் நிறைந்த செழிப்பான கிராமமாக மட்டுமல்லாமல் புகழ்பெற்ற ஆலயங்கள் அரிசி ஆலைகள் நெசவு சாலைகள் புகழ்பெற்ற ஆலயங்கள் நிறைந்ததும் சமயப்பெரியோர்கள் கல்விமான்கள் இசைவிற்பன்னர்கள பலர் தோன்றியதும் சைவமும் தமிழும் செழித்தோங்கிய இணுவில் மண்ணில் பிறந்தார்.

இவரின் தந்தையார் இளையதம்பி ஆறுமுகம் ஆவார். தனக்கென வாழாது பிறருக்காக வாழும் பண்புடையவர். இணுவில் மண் இவருக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்தது மட்டுமல்லாமல் திரு. இளையதம்பி ஆறுமுகத்தின் நேர்மை மேலோங்கி நின்றதனால் அவரைக் கண்டு அந்த ஊர் மக்கள் அவர் கூற்றுக்குக் கட்டுப்புட்டும் நடந்தனர். இப்படியான வம்சா வழியில் வந்தவரான திரு. ஆறுமுகம் இராசரத்தினம் அவர்களுக்கு அவரின் வாழ்நாளில் பல பெயர்கள் சூட்டப்பட்டன. சமுதாயம் இவரை ஐயா என்றும், பண்டிதர் என்றும் சாமியார் என்றும் முப்பெயர்கள் சொல்லி அழைத்து வந்திருக்கிறார்கள்.

இவர் தனது ஆரம்பக் கல்விதொடக்கம் க.பொ.த. வரை இணுவிலில் படித்து 1942ம் ஆண்டு க.பொ.த. பரீட்சையை தமிழ்மொழி மூலம் கற்றுச் சித்திபெற்றார். பின் 1949ஆம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் தொடர்ந்து ஆங்கில மூலம் கல்வி கற்று க.பொ.த. பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் நற்பெறுபேறுகள் பெற்று 1st Division னில் சித்தியடைந்தார் அது மட்டுமன்றி 1948ல் வடமாகாண ஆசிரியர் சங்கம் நடாத்திய க.பொ.த. பரீட்சையில் வடமாகாணத்திலேயே முதல் மாணவனாகச் சித்தியடைந்து அதற்கான பரிசுப்பணமான 25 ரூபாவையும் தட்டிச்சென்றார். (அந்த நாட்களில் இது பெறுமதியான தொகை) பின்னர் 1950ம் ஆண்டு கொழும்பு சென்று அங்குள்ள இலங்கை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து Apothecary Course எடுத்து ஓராண்டைப் பூர்த்தி செய்தார். அதேவேளை 1951ம் ஆண்டில் நடைபெற்ற General Clerical Service பரீட்சைக்கும் தோன்றி அதிலும் சித்தி பெற்றார். அதன் பலனாக அவருக்கு General Clerical Service ல் வேலையும் கிடைத்தது.

இவரது முதல் நியமனமும் வேலையும் 1951ம் ஆண்டு நாலாம் மாதம் 28ம் திகதி மாத்தறைக் கச்சேரியில் ஆரம்பமானது. அந்தக் காலகட்டத்தில் அரசாங்க உத்தியோகம் கிடைப்புது கடினம். இந்நிலையில் இவருக்கு இந்த அரசாங்க உத்தியோகம் கிடைத்தது பெரும் பேறாகவே கணிக்கப் பட்டது. சிறுவயதில் இருந்தே இவருள்ளே இயல்பாக இருந்த விவேகம், திறமை, புத்திசாதுரியம் அனைத்தையும் வெளிக்கொணருவதற்கு இந்த அரசாங்க உத்தியோகம் ஒரு பெரும் தளமாக அமைந்தது.

1953ல் ஆண்டில் இவருடைய தொழில் திறமையைக் கண்டு பாராட்டிக் கொழும்பில் உள்ள Auditor General's அலுவலகத்துக்கு மாற்றம் செய்யப் பட்டார். அங்கும் அவர் ஓயவில்லை. அரசாங்கத்தினால் நடாத்தப்படும் Class – II பரீட்சையை எடுத்து அதிலும் சித்தி அடைந்தார். அந்த வேளையில் தான் அவரது பெற்றோர்கள் நீர்வேலி எனும் கிராமத்தில் இருந்து மணமகளைத் தேர்ந்தெடுத்து திருமணமும் செய்து வைத்தனர் சௌந்தரராணி என்னும் மணமகளோ நீர்வேலிவாழ் திரு. தர்மலிங்கம் திருமதி. பொன்னம்மா ஆகியோரின் ஒரே செல்வப்புதல்வி ஆவார். இவருக்கு தர்மலிங்கம் தர்மசேகரன் என்ற ஒரே ஒரு சகோதரன் உண்டு. இவர்களின் பெற்றோர் சிங்கப்பூரிலிருந்து இடம்பெயர்ந்து நீர்வேலிக்கு வந்து தவமிருந்து இவர்களைப் பெற்றெடுத்தார்கள். திரு. தர்மலிங்கம் அவர்களின் தந்தை கந்தையா என்பவர் காசியிலிருந்து சிவலிங்கம் ஒன்றையும் காசி விசாலாட்சி சிலை ஒன்றையும் கொண்டு வந்து நீர்வேலி கந்தசாமி கோயிலில் பிரதிஷ்டை செய்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குரிய பூஜைச் செலவிற்காக ஒரு காணியைக் கோவிலுக்குத் தர்ம சாசனம் செய்தவர். அதுமாத்திரமன்றி சௌந்தரராணியின் தந்தையார் ஒரு கோயில் அறங்காவலருமாவர்.

திரு. இராசரத்தினம் அவர்களுக்கு மூன்று பிள்ளைகள்- இரண்டு பெண்கள் ஒரு ஆண். மூத்த மகள் சசிகலா. இவர் இலண்டன் பாபா சுரேஸ் கிருஷ்ணாவை மணம் முடித்துள்ளார் இரண்டாவது மகள் ஸ்ரீ தயாபரி. இவர் மனோராஜை மணம்முடித்துள்ளார் இவர்கள் மூலம் சச்சின், மிலெனா என இரு பேரப்பிள்ளைகள் உண்டு. மூன்றாவது ஒரே மகன் ஸ்ரீசுதன் இவர் சங்கவை என்பவரை மணம்முடித்துள்ளார் இவர்கள் மூலம் அனுஷ்கா என்ற பேரக்குழந்தை உண்டு. இவர்கள் அனைவருமே தற்போது இலண்டனில் வாழ்ந்து வருகின்றனர்.

திரு. இராசரத்தினம் அவர்கள் சிறுபிராயத்தில் இருந்தே ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் அவருடைய வீட்டுக்கு அருகாமையில் உள்ள ஆலயத்துக்குச் சென்று அங்கே தன்னால் ஆன தொண்டுகளைச் செய்த பின்னரே பாடசாலைக்குச் செல்வார். பாடசாலையால் வந்தவுடன் அவரது தந்தையார் நடாத்தி வந்த பலசரக்குக் கடையில் தந்தைக்கு உதவியாக இருப்பார். இவரது 14 வயதிலிருந்து அவரது தந்தையாரின் வியாபாரம் விருத்தியடைந்து புகையிலை வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்தார் இதன் பிரதிபலிப்பாக அவர் தனது 14 வயதிலிருந்து பாடசாலை முடிந்தவுடன் புகையிலை சுருட்டுவதிலும் தனது தந்தையாருக்கு உதவியாக இருந்துள்ளார்

நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஏழைகளின் கல்வி மேம்பாட்டுக்கு ஊக்கம் அளித்தார் இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுத்தார்.

1966ம் ஆண்டு அரசாங்கத்தினால் Assistant Superintendent of Auditor ஆகப் பதவி உயர்வு பெற்றார் இந்தப் பதவியில் இருக்கும்போது இவர் பல தடவைகளில் பாராளுமன்றம் செல்வதுண்டு. அங்கே Public Accounts Committee க்கு உதவும் வகையில் அவருடைய வருகை அமைந்திருந்தது.

இந்தப் பதவியில் இருக்கும்போதும் இவருக்குத் தொடர்ந்தும் பேரும் புகழும் கிடைத்த வண்ணமே இருந்தன. இவருடைய அலுவலகத்தில் இவரை ஐயா என்றுதான் அழைப்பார்கள். தனது சக உத்தியோகத்தர்களுக்கு சகல விடயங்களிலும் இவர் மிக உதவியாக இருப்பார். அதேவேளையில் கண்டிப்பாகவும் இருப்பார். பல சகாக்களை வேலைவிலகலில் இருந்து காப்பாற்றி இருக்கிறார். இப்படிப்பார்க்கும் பட்சத்தில் திரு. இராசரத்தினம் அவர்களும் அவரது தந்தையார் இளையதம்பி ஆறுமுகத்துக்குச் சளைத்தவர் அல்ல. ஏனெனில் இவரும் தனக்கென மட்டும் வாழாது பிறருக்கெனவும் வாழும் பண்புடையவராக இருந்துள்ளார்.

1980ம் ஆண்டில் திரு.இராசரத்தினம் அவர்களை இலங்கை அரசாங்கம் New Delhi க்கு Scholarship பில் அனுப்பியது. இந்தியாவில் இப்படி அழைப்பது ஒரு முக்கியம் வாய்ந்த Audit Practice ஆக இருந்தாலும் ஆத்மீகவாதியான திரு. இராசரத்தினம் அவர்களுக்கு புகழ்பெற்ற பல ஆலயங்களைத் தரிசிப்பதற்கு இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சந்தர்ப்ப மாகவும் அமைந்தது. இவரது முதல் தரிசனம் காஞ்சியிலே ஆரம்பமானது. பின் அங்கிருந்து பழனிக்குப் பேருந்தில் பிரயாணித்த வேளை இவருக்கு அருகில் இருந்த ஒரு தம்பதிகள் நாங்களும் புனித தல யாத்திரை செல்கிறோம், நீங்களும் எங்களுடன் வாருங்கள் எனக் கூறியபோது அந்த ஊரில் இடம் வலம் தெரியாமல் நின்ற திரு. இராசரத்தினம் அவர்களுக்கு முன்பாக அந்தக் கடவுளே வந்து நின்றது போன்ற உணர்வு ஏற்பட்டது. பழனி முருகனைத் தரிசித்தபின் வடலூர் இராமலிங்க சுவாமிகள் ஆலயத்துக்கும் அதனைத்தொடர்ந்து இரு வாரங்கள் முக்கியம் வாய்ந்த பல தலங்களை இந்தத் தம்பதிகளுடன் சென்று தரிசித்து விட்டு நாடு திரும்பி நீர்வேலி கந்தசாமி ஆலயத்துக்கு கும்பாபிஷேகம் நடந்த அன்று வந்து அந்த ஆலயத்தின் குருக்களுக்கு தான் கொண்டு வந்தவற்றைக் காணிக்கையாகப் பாத பூஜை செய்தது திரு. இராசரத்தினம் அவர்களுக்கு அவரின் யாத்திரையை ஆசீர்வதிப்பதாக இருந்தது.

இவர் சிறுவயதில் இருந்தே சதாசிவ சட்டம்பியார், வடிவேல் சுவாமி, நயினாதீவுச் சுவாமிகள், யோக சுவாமிகள் ஆகியவர்களின் தொடர்பையும் ஆசீர்வாத அனுக்கிரகங்களையும் பின்னர் இந்திய யாத்திரைக் காலத்தில் காமகோடி காஞ்சிப்பெரியார் போன்ற பல ஞானிகளின் ஆசீர்வாதங்களையம் பெறும் பேறுகளும் கிடைக்கப் பெற்றார். அனேக ஞானிகளும் வினாசித்தம்பி ஆசிரியரும் இவருடைய சிறிய மனைக்கு வந்து தங்கிப்போவது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் 1961ம் ஆண்டில் இருந்து பம்பலப்பிட்டி காலிவீதியில் அமைந்துள்ள மாணிக்க விநாயகர் ஆலயத்தின் தொண்டனாகவும் பக்தனாகவும் இருந்து வந்ததனால் அந்த ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் திரு. இராசரத்தினம் அவர்களைச் சாமியார் என்று பெயர்சூட்டி அழைத்தனர். அதே ஆண்டிலே (1961) இவருக்கு அருட்கவி வினாசித்தம்பி ஆசிரியரின் நட்பு ஏற்பட்டது. இதன் விளைவாக அருட்கவி வினாசித்தம்பி ஆசிரியர் கொழும்புக்கு வரும்போதெல்லாம் திரு. இராசரத்தினம் அவர்களுடன் அவருடைய வதிவிடத்திலேயே தங்கி வந்தார்.

1988ம் ஆண்டு 3ம் மாதம் 1ம் திகதியன்று அப்போதய ஜனாதிபதி ஜயவர்த்தனா அவர்களால் திரு. இராசரத்தினம் அவர்கள் Deputy Auditor General ஆக பதவி உயர்த்தப் பட்டார். இத்தகைய உயர் பதவிக்கு அவர் நியமனம் பெற்று அதைத்திறமையுடன் வகித்தது தமிழர்களுக்கெல்லாம் பெருமை சேர்த்த ஒரு நிகழ்வாகும். இச்சேவையில் இருந்து அவர் 1989ம் ஆண்டில் இளைப்பாறிய பின்னர் இலங்கை அரசாங்கம் நெதர்லாந்து அரசாங்கம் இரண்டும் கூட்டாக இணைந்து நடாத்திய Institute of Policy Studies என்ற அமைப்பில் ஆலோசகராகப் பணியாற்றினார்.

பின்னர் 2001ம் ஆண்டு திரு. இராசரத்தினம் அவர்கள் 50 வருடங்களைப் பூர்த்தி செய்து தனது அரசாங்கம் சார்ந்த அனைத்து உத்தியோகங்களிலுமிருந்து இளைப்பாறித் தன்னைத் தமிழ் அமைப்புக்கள், தமிழ்ச் சங்கங்கள், பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயத் தொண்டு போன்றவைக்கு முற்றுமுழுதாக அர்ப்பணித்துக் கொண்டார். தனது வருமானங்கள் அனைத்தையுமே இன்று வரை மாணிக்க விநாயகர் ஆலயத்துக்கும் தானதர்மங்களுக்குமே செலவிட்டு வந்தார். சம்மாங்கோட்டார் ஸ்ரீமாணிக்க விநாயகர் கோவிலில் தினமும் வழிபட்டு தொண்டுகளை ஆற்றிவந்த திரு. இராசரத்தினம் அவர்களை பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை வாழ் தமிழ்மக்கள் நன்கு அறிவர். அவரது சீரிய குணங்களால் அவர்மீது எல்லோரும் அன்பாகவே நடந்தனர்.

திரு. இராசரத்தினம் அவர்கள் வடமாகாணத்தின் முதன்மை மாணவனாக க.பொ.த. பிரீட்சையில் சிறப்புச் சித்தி அடைந்தது மட்டுமல்லாமல் அவர் தமிழிலும் ஒரு வித்தகனாக இருந்தார். பல சமூக, சமய சம்பந்தமான அரங்குகளில் சொற்பொழிவு ஆற்றத் தொடங்கியதால் மக்களினாலே சூட்டப்பட்ட பண்டிதர் என்ற பட்டத்தையும் சூடிக் கொண்டார்.

இவருக்குப் பெரியபுராணம், திருவாசகம், பிள்ளையார் புராணம், கந்தபுராணம் என்பவற்றிலே பற்றுதல் இருந்ததன் காரணமாக நாயன்மார் பூஜைகளின் போது சொற்பொழிவுகள் ஆற்றுவதுண்டு. இவர். கணித பாடத்தில் சிறுவயதில் இருந்தே வித்தகராக இருந்ததனால் ஜோதிடம் கணிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

திரு. திருமதி இராசரத்தினம் தம்பதிகளின் பிள்ளைகளாகிய நாம் மூவரும் இலண்டனிலே வாழ்ந்து வந்தோம். அங்கேயே நீண்டகாலமாக நாம் வாழ்ந்து வந்தமையினால் தந்தையார் தமது இறுதி நாட்களை எம்முடனேயே கழிக்க வேண்டுமென்பதற்காக நாம் முயற்சி எடுத்து எம்மோடு இருக்க அழைத்துக்கொண்டோம். அதனால் அவர் கடந்த நான்கு ஆண்டுககளாக இலண்டனை வதிவிடமாகக் கொண்டு அவரது ஒரே மகன் ஸ்ரீசுதன் ஆகிய என்னுடனே வசித்து வந்தார். கூடவே அவரது இருபெண்பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என சுற்றம் சூழ்ந்து அவரது வாழ்வு அமைந்தது.

எங்களில் மூத்த மகள் சசிகலா ஆகிய நான் நீண்ட காலமாக ஹரோ நகரசபையின் கவுன்சிலராகப் பணிபுரிந்தேன். என் கணவர் சுரேஷ் கிருஷ்ணாவும் அதே ஹரோ நகரசபையில் கவுன்சிலிலராகப் பணிபுரிந்து தற்போது பன்மொழி பேசும் சமூகங்கள் வாழும் ஹரோ நகரசபை நகரபிதாவாகவும் பணிபுரிந்து விளங்குகிறார். தந்தையாரின் பெரும் தவப்பேற்றின் காரணமாகவே அவரின் மருமகன் நகரபிதாவாகவும் மகள் நகர முதல் பெண்ணாகவும் பதவிபெற்றுள்ளோம் என நாம் நம்புகிறோம்.

இவ்வாறு இலண்டனில் அவர் வாழ்க்கை அமைந்த காலத்தில் அவரது மருமகன் சுரேஷ் கிருஷ்ணா அவர்கள் ஹரோ நகரசபையின் நகரபிதாவாகப் பதவி ஏற்ற விழாவில் கலந்து கொண்டு உவகை அடைந்தார்.

தந்தையார் மிக நீண்ட காலமாக தனது வாழ்க்கையில் சந்தித்த அனுபவங்களை, ஆன்மீக ஆக்கங்களாக அவ்வப்போது எழுதிவைத்திருந்தார். அவை அனைத்தையும் பேணிப் பாதுகாத்து, வளரும் தலைமுறைக்கும் எதிர்கால சந்ததிக்கும் பொக்கிஷமாக இருக்க வேண்டுமென்று கருதிய நாம் அவற்றை யெல்லாம் திரட்டி ‘கதம்பம்’ என்ற நூல் வடிவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி இலண்டன் வாழ் சைவப் தமிழ் பிரமுகர்கள் கலந்து கொள்ள 2014ம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஏழாம் திகதி ஹரோ நகரசபை மண்டபத்தில் வெளியிட ஆவன செய்தோம். கீழ்க் காணும் பக்திப் பாடல்களை தந்தையார் அடிக்கடி பாராயணம் செய்வார்.

## இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்

1 சீரார் பரராஜசேகரரெனும் பேரார்
நலம்படைத்த பிரணவத்தின் மெய்ப்பொருளே
ஆரார் அமுதே அப்பனே அடியேனின்
தீராவினை தீர்த்துத் திருவருளைச் செய்தருளே.

2. கருவிற்புகு மீன தீமையைப் புரியாதே
தரவுச்சம யாசார் நூல்களைப் படியாதே
உருவத்தொரு நாம மாயிரத் துதிபாடி
உளமொத்த தியான வாழ்வுறப் பணியாயே.

3. முருகற்கு முன்னான சோதரக் கணநாதா
முது கற்பகமான தாருவைத் தருவானே
எருதில் பொலி ஈசனாரனைத் தருவானே
இணுவிற் பரராஜ சேகரப் பெருமானே.

- அருட்கவி

## பம்பலப்பிட்டி அருள்மிகு சம்மாங்கோட்டார் மாணிக்க விநாயகர்

நிலையான பேறுதவும் நிமலா போற்றி
நினைவார்கள் நெஞ்சில் உறை நிறைவே போற்றி
தலையாலே பணிவார்க்குத் தலைவா போற்றி
தற்பரமே சைவநெறித் தருவே போற்றி
அலையேறு காவிரியை அருள்வாய் போற்றி
அங்கையில் அங்குச பாசம் அமைத்தாய் போற்றி
மலை வேலனுடன் மகிழ் வெள்ளவத்தை மேவும்
மாணிக்க விநாயகனே போற்றி போற்றி.

- அருட்கவி

## தொண்டைமானாறு செல்வச் சந்நிதி

பொன்னென மண்ணென மிகுமாசை
புன்னெறி பின்னிய மதியேனை
மின்னெனு மிந்நில உறவேக
விண்ணுறு தண்ணளி புரிவாயே
நந்நெறி முன்னிய குருநாதா
நண்ணிய புண்ணிய வடிவோனே
தன்னிலை யுன்னுணர் வருள்வோனே
சந்நிதி மன்னிய பெருமாளே.

## ஸ்ரீ நாராயணர்

ஆமாறுனை ஆராதனை புரியாதே
ஆதாரமுன் கீதாரமென் றுணராதே
சாமாறிடர் சூழ்தீவினை பயில்வேனை
தாணீணிழல் சேர்மாறருள் பொழிவாயே
தாமோதர கோபாலனென் றிடைமாதர்
தாலோ என நாவூறிட வருவோனே
நாமமாயிர மேலாம்வடி வுடையோனே
நாகேஸ்வர நாராயண பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலிக் கந்தன்

தாரா எப்பழ வகைபொரி கடலைமிக் கொடுதேங்காய்
சாறார் சர்க்கரை பயறொடு நறுசுவைப் பசும்பாலால்
சீரா கப்பணி யடியவ ரிடரறப் பயில்வோனே
தேவா ரத்திரு முறையரு ளுனைமனத் தினிற்றவராய்
ஏரா எப்பல கலைதனை யொருமருப் பொடுமேரு
ஏடா கப்பொலி தரஎழு தியகரச் சிவரூபா
நேரா கப்பொரு கஜமுக எலிதனிற் நிகழ்வோனே
நீர்வே லிப்பதி மருவிய கணபதிப் பெருமாளே.

## நற்சிந்தனை

சோதிப் பிழம்பே சுரி குழலான தன் கணலா
ஆதிப் பொருளே அறியாமையால் யான் மிகவும்
பாதிக்கப் பட்டேன் பரனே யினி யுனது
நீதிக் கழல் காட்டி நீயென்னை யாளாயோ
ஆள என மெய்யடியார் அகங்கொண்டவனே
கேளாயோ யின்னும் கிருபையுனக் கில்லையோ
பாழாகப் போகாமற் காப்பதற்குன் கண் பாருமையா
வாழாயிருந்தால் பழியுமக்கு வந்திடுமே
வந்துன்னடி யடைந்த மெய்யடியார் வருத்தமெல்லாம்
வெந்துபோம் வண்ணம் மிகு கருணை நீயளிக்கும்
அந்தமொழி கேட்டு அடியேனு முன்னடிக்கீழ்
வந்தேன் கருணை வழங்காய் நீ வான்பொருளே.

\- சிவயோக சுவாமிகள்

இப்படியாக இறைபக்தியுடனும் மற்றையோருக்குச் சேவைபுரியும் மனப்பாங்குடனும் ஆழ்ந்த தமிழ்ப்புலமையுடனும் வாழ்ந்த எம் தந்தையார் திரு ஆறுமுகம் இராசரத்தினம் அவர்கள் அவரது 87வது வயதில் குறிப்பிடத் தக்க எதுவித உடல் உபாதைகளையும் நாட்கணக்கில் கூட அனுபவித்துத் துன்பப் படாது 2015ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி அதிகாலையிலே சயனத்திலேயே இறைபதம் அடைந்தது அவர் இதுவரையும் செய்து வந்த நற்பயன்களின் பெறுபேறு என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

அவரின் பிள்ளைகளாகிய நாம் அனைவரும் எமது அரும்பெரும் தந்தையாரை இழந்துவிட்டோமே என்ற மீளாத்துயரில் ஆழந்திருந்த போதிலும் அவரது கடைசி நாட்களில் எவருக்கும் எதுவிதமான கஷ்டங்களையும் கொடாமல் மறைந்து விட்டமையை எண்ணி மற்றையோருக்கு எதுவிதமான இன்னல்களையும் கொடுக்கக்கூடாது என்ற அவரது பெருந்தன்மையை நினைந்து பெருமைப் படுகிறோம். அவர் செய்த புண்ணியகருமங்களின் பலன்களினாலேயே அவரது வாரிசுகள் ஆகிய நாம் அனைவரும் சீரும் சிறப்புடனும் வழ்கிறோம் என்பது நிதர்சனம்.

எமது தந்தையார் மறைந்த நாள் தொடக்கம் அவரது இறுதிக்கிரியைகளை நடத்தி முடிக்கும் வரை எங்களுக்குச் சகல உதவிகளைகளையும் வழங்கி எங்களின் துயரத்திலேயும் பங்கு கொண்ட உற்றார் உறவினர் நண்பர்கள் நலம்விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தங்கள் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கிறோம்.

இப்படிக்கு: சசி, தயாபரி, சுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. இராசரத்தினம் அவர்களின் பெற்றோர்கள்

தாயார் - மருதப்பா செல்லாச்சி

தந்தையார் - இளையதம்பி ஆறுமுகம்




## திரு.இராசரத்தினம் அவர்களின் சகோதரர் திரு.குணரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. இராசரத்தினமும்
அவர்களின் மனைவி திருமதி.சௌந்தரராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. இராசரத்தினம் அவர்களின் பெற்றோர்கள்

தாயார் - மருதப்பா செல்லாச்சி
தந்தையார் - இளையதம்பி ஆறுமுகம்



## திரு.இராசரத்தினம் அவர்களின் சகோதரர் திரு.குணரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.திருமதி.இராசரத்தினமும்
சகோதரர் திரு.குணரத்தினமும் அவருடைய மனைவியாரும்
மைத்துனர் திரு.தர்மசேகரமும் அவருடைய மனைவியாரும்



திருமதி.சௌந்தரராணி இராசரத்தினம் அவர்களின் பெற்றோர்கள்
திரு.கந்தையா தர்மலிங்கம் - திருமதி.பொன்னம்மா தர்மலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My Thatha

Thatha is very helpful and he always protects me
he helps me with hard questoins.
I Say "pottu varan" when I go to School, he say om
who should I say it to now?
I will ways rember you I will Never forget you

miss you thatha

Anushka x.

your grand daughter

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thatha was a man of ardent faith and devotion

**Milana Manoraj (Grand Daughter)**

Thatha was a man of ardent faith and devotion. He had a strong connection with God which is even stronger now that he is in heaven. Although receiving an education was difficult when Thatha was a child he is still by far the most intelligent man I know. He was constantly asking questions and sharing his wisdom with us. I'm very grateful that I was able to spend so much time with Thatha in the last four years. We have made so many memories together that I will cherish forever; not only was Thatha an inspirational figure to all but an affectionate grandfather with a great personality. I'm grateful that I was able to take care of Thatha while Mama was on holiday by visiting Thatha every night with Anna and making him dinner and tea. Although we will miss Thatha a lot there is no doubt that he lived a fulfilling life achieving many things like the release of his book. Thank you Thatha for always caring for me and blessing before my exams. Thatha always remembered to ask me about my tests and was keen to find out about how I did.

Although you may not be here in person you will forever be in our hearts and I know that you will continue to watch over and guide us in Heaven.

I love and miss you so much Thatha.

Milana

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29/12/15

# பெரியப்பப்பா என்றும் எங்களுடன்

பெரியப்பப்பா ஒரு great man. அவர் எங்கள் எல்லோருடனும் அன்பாக பழகுவார். எல்லோருக்கும் பெரியப்பப்பா ஒரு role model. அவர் எங்கள் எல்லோருடனும் எப்பவும் phone அடிச்சு கதைப்பார். நாங்கள் எங்களுக்காக சாமி கும்பிடுவோம் ஆனால் பெரியப்பப்பா எல்லோருக்குமாக சாமியை கும்பிடுவார்.

சஜீவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My grandpa lived a remarkable life

## Sachin Manoraj (Grand Son)

For those of you who don't know me, my name is Sachin Manoraj. I just wanted to say a few words in memory of my grandpa.

My grandpa lived a remarkable life, one that inspired me greatly. His broad range of interests, and his kind demeanour made him a wonderful person to know. He was very patient, and generous with his time and affection.

He always took an interest in the people he met: there were few people he wouldn't engage at any time or place. My grandpa pursued his many endeavours diligently, and always rose to meet a challenge. I always felt that he expected the same of me, too. He was philosophical in his approach to life. He especially had a great perspective when it came to the little things, never displaying anger or annoyance. As many of you will know, he was also a very intelligent man, who tried his utmost best to pass on as much of his scientific knowledge as possible.

I loved to visit my grandpa because he would tell me stories about his life in Sri Lanka, including his career as deputy auditor general, while I massaged his legs. There was nothing more satisfying than bringing a smile to his face.

Grandpa, I will always miss you. But I have so many wonderful memories to hang on to. You are a role model, and a friend. Your guidance and love will carry me through to the end of my days. I love you Grandpa, until we meet again.

Thank you

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியப்பாவும் அப்பாவும்

அப்பாவும் பெரியப்பாவும் இணைபிரியாத இரு சகோதரர்கள். இருவரும் அரச உத்தியோகத்தின் நிமித்தம் பம்பலப்பிட்டி – காலி விதியில் இருந்த திரு சபாபதிப்பிள்ளை (லண்டன் உயர்வாசல் குன்று முருகன் ஆலய ஸ்தாபகர்) அவர்களின் வீட்டில் வசித்து வந்தார்கள். திருமணத்தின் பின் அப்பா, அம்மாவுடன் 'அண்டர்சன் தொடர் மாடிக் குடியிருப்பில்' வாழ்ந்து வந்தார். பெரியப்பா தொடர்ந்தும் அதே வீட்டில் லண்டனுக்கு 2011இல் நிரந்தரமாக வரும்வரையில் வாழ்ந்து வந்தார்.

பெரியப்பா ஒரு தீவிரமான இறைபக்தர். தினமும் இருவேளை கோவிலுக்குச் செல்வார். அப்பா அப்படியல்ல. வெள்ளிக்கிழமை, மற்றும் விஷேடதினங்களில் விரதம் இருந்தால் கோவிலுக்குப் போவார். கோவில் பூசை முடிய இருவரும் சுகம் விசாரித்து, பெற்றார், உற்றார், உறவினர், ஊரார் பற்றிய புதினங்களை பகிர்ந்து மகிழ்வார்கள். அப்பாவிடம் தனது சிறு உடல்கோளாறுகளுக்கு மருத்துவமும் ஜோதிடத்தில் கிரகநிலை, தசாபுத்தி போன்ற ஐயப்பாடுகளை அப்பாவும் அறிந்து கொள்வார்கள். அம்மாவின் சமையலில், பெரியப்பாவிற்கு அலாதிப் பிரியம். வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் எங்களுடைய வீட்டில்தான் ஒருவேளை உணவை உண்பார். அவருக்கு உடல்நிலை சரியில்லை என்றால் அப்பா அல்லது நாங்கள் சாப்பாட்டை எடுத்துச்சென்று கொடுப்போம்.

அப்பா மருத்துவ சேவையிலும் பெரியப்பா, வேலை வாய்ப்பு, இடமாற்றம், ஓய்வூதியத்தை துரிதப்படுத்தல் போன்றவற்றில் பலருக்கும் உதவியாக இருந்தார்கள். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என வாழ்ந்த இருவரும் இணுவிலில் பிறந்து, கொழும்பில் வாழ்ந்து, இறுதியில் பிள்ளைகளுடன் லண்டனிலேயே இருந்த வேளையில் இவ்வுலக வாழ்வை நீத்தமை வியப்புக்குரியதே.

அப்பா 2009இல் லண்டனில் ஐந்து பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் தனது ஒருமகனின் பிறந்தநாள் விழாவின் பின் சித்திரை மாத வெள்ளிக்கிழமையில் - பெரியப்பா உயிர்நீத்த அறைக்கு கிட்டவாக – அவசரசிகிச்சை வண்டியில் உயிர் நீத்தார். இதே போலவே பெரியப்பாவும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்து மகளின் பிறந்த நாளைக் கொண்டாடிவிட்டு வெள்ளிக்கிழமை அதிகாலையில் உயிர்நீத்தார். இருவரின் உடல்களும் ஒரே பாதையில் சென்று அப்பாவின் உடல்இருந்த அதே அறையிலேயே வைக்கப்பட்டது.

இவர்களுடைய பாசப் பிணைப்பிற்கும் ஒற்றுமைக்கும் இதைவிட வேறென்ன வேண்டும்.

பெரியப்பாவிற்கு எனது இறுதி மரியாதையைத் தெரிவிக்கின்றேன்.


அன்புப் பெறாமகன்

மனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குன்றில் இட்ட தீபம் எங்கள் மாமா

ஈழ வளநாட்டின் வடபால் அமைந்தும், நன்மதிப்புப் பெற்றதும், சித்தர்கள், பக்தர்கள் வாழ்ந்த, வாழுகின்ற ஊர் இணுவையம்பதி, இத்தகைய ஊரிலே எமது குடும்பத்தின் மூத்த தலைவராக வழி காட்டியாகத் தோன்றியவரே எமது அன்புக்கும் வணக்கத்திற்குமுரிய பெரியமாமா ஆறுமுகம் இராசரத்தினம் அவர்கள்.

அவர் ஒரு இல்வறஞானி, யோகர்சுவாமிகள், அருட்கவி விநாசித்தம்பிப் புலவர் ஆகியோரைக் குருவாகப் பெற்றவர். குருவருளுந் திருவருளும் பெற்று இளமைவயது முதற் கொண்டே சைவ அனுட்டானங்களுடன் கூடிய வாழ்வு வாழ்ந்தவர். அவரது சிவவேடப் பொலிவை யாரும் மறக்கமாட்டார்கள் ஆஜானுபாகுவான நீண்டு வளர்ந்த எடுப்பான தோற்றப் பொலிவு, அகன்று பரந்த நெற்றியிலே முக்குறிகளால் அமைந்த திருநீற்றுப் பூச்சு சந்தனப் பொட்டு கழுத்திலே உருத்திராக்க மணிமாலைகள், இடுப்பில் ஒரு நான்குமுழ வேட்டி, சுற்றிக் கட்டிய சால்வைத் துண்டு இதுதான் எங்கள் மாமாவின் தோற்றம்.

இளமைக் காலந்தொட்டே ஆன்மீக நாட்டங்கொண்ட இவர் குல தெய்வமாகிய ஸ்ரீ பரராச சேகர விநாயகரிடம் அயராத பக்கியுடையவராக இருந்தார். சமயச் சொற்பொழிவுகள் கேட்டல், சமய சாத்திர தோத்திரங்களின் நூல்களைப் படித்தல், சமயக் கட்டுரைகள் வரைதல் என்பன இவரது பொழுது போக்குகளாகும். சமயப் பெரியார்களின் ஞானிகளின் நல்ல நண்ர்களின் தொடர்பும் இவருக்கு இருந்தது. இதனால் இறுதி வரை நற்சிந்தனையாளனாக வாழ்ந்தார். ஏழைகளுக்கும், கல்விக்கும், கோவில்களுக்கும் இயன்ற பண உதவி புரிந்தவர்.

ஓய்வு நேரங்களை நற்சிந்தளைகளிலும் சமயக் கட்டுரைகள் எழுதுவதிலும், செலவிட்டார் இவர் தினகரன், வீரகேசரி, சுதந்திரன், ஞானக்கதிர், பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் வரைந்துள்ளது எல்லா வகையிலும் எமக்கு முன்னோடியாக வாழ்ந்து காட்டிய மாமா இன்று இலண்டன் மாநகரில் இறைநிலை அடைந்தது எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் எமது குடும்பத்துக்கு மட்டுமல்ல பெற்றோருக்கும், தான் வாழ்ந்த ஊருக்கும், படித்த பாடசாலைகளுக்கும் பெருமை சேர்த்தவர். தற்பொழுது இணுவில் இந்துக்கல்லூரி என அழைக்கப்படும் சைவப்பிரகாச வித்தியாசாலையில் S.S.C வகுப்பு வரை கற்று மேல் படிப்பை யா/இந்துக் கல்லூரியில் நிறைவு செய்தார். கணக்காளர் நாயம் எனும் பதவி உயர்வு பெற்று அரசாங்கத்தின் நன்மதிப்பும் பெற்றார்.

ஒருவன் சமய போதனைகள் செய்வதிலும் சமயசாதனைகள் செய்து வாழ்தல் மேலானது. இந்த வகையில் மாமா அவர்கள் எமது குடும்பத்தவர், எமது சமூகம், கிராமத்துக்கு ஒரு எடுத்துக் காட்டாக வாழ்ந்துள்ளார் தமது 82 வது வயதில் இலண்டன் மாநகரில் சமயக் கருத்துக்கள் அடங்கிய ("கதம்ப மலர்") என்ற நூலை வெளியிட்டுப் பெருமை கொண்டார்.

உள்ளத்தில் அன்பும், உறுதியும், இரக்கமும், கண்டிப்பும், எம்மை வழிநடத்தும் தலைமைத்துவமும் கொண்டவர். காலை மாலை வேளைகளில் ஆலயத்திற்கு செல்லும் வழக்கமுடையவர். இவரது நடத்தைகளை நாமும் பின்பற்றி வாழுகின்றோம். ஒருகை விளக்கானது தானிருக்கும் சுற்றுச் சூழலுக்கு ஒளி கொடுத்தல் போல எமது மாமாவும் எமது கிராமம் மட்டுமல்ல, கொழும்பு, இலண்டன் நகர்களிலும் வாழ்ந்து நடைஉடை பாவனை யாவற்றிலும் ஒளி விளக்காகத் திகழ்ந்தவர் அவரை நாம் சாதாரண விளக்காகப் பார்க்காவில்லை. குன்றிலிட்ட தீபமாகவே பார்க்கிறோம். அவரது திடீர் மறைவு எம்மைத் துயரத்தில் ஆழ்த்துகின்றது. அவரது ஆத்மா சாந்திக்காக வணங்குகின்றாம்

இப்படிக்கு
இரத்தினம் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.இராசரத்தினம் அவர்களின் சகோதரி இரத்தினமும்
அவர்களின் குடும்பத்தினரும்



திரு.இராசரத்தினம் அவர்களின் உற்றார்உறவினர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறவாழ்வின் நீட்சியில் அமரரானவர்

அமரர் இராசரத்தினம் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். வானுறையும் மோட்சப் பெருவாழ்வை எட்டியவர்.

அவரின் வாழ்க்கை உலகின் அநாதியான இந்து தர்மத்தை அடியொற்றியது. சத்தியமும் தர்மமும் அவரின் வாழ்க்கையோடு நீடித்த இலக்குகளாக அமைந்தன.

ஓர் இந்து எப்படி வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக உன்னத வாழ்க்கையை வாழ்ந்தவர்.

மனிதன் அழியலாம் ஆனால் மனித ஆத்மா அழியாதது என்றுமே உள்ள நித்தியப் பொருளாக விளங்குவது ஆத்மா. இந்த ஆத்மா பரமாத்மாவுடன் இணைய வழிகாட்டுவதுதான் இந்து தர்மம். அந்தத் தர்மத்தைத் தமது வாழ்வில் நிலை நிறுத்தியவர் அமரர் இராசரத்தனம் அவர்கள். இந்து மதத்தின் பனுவல்களாக அமைவது வேதங்கள். "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என்பது அமுத வாக்கு வேதசாரமாக விளங்குவது திருமுறைகள். திருமுறைகள் விளக்கும் சைவம் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழியைக் காட்டுவது.

அமரர் இராசரத்தினம் திருமுறைகளிலும், தமிழ் இலக்கியங்களிலும் ஆழ்ந்த ஞானம் கொண்டார் அவற்றை வாசித்து அவற்றினூடே முகிழந் தெழும் ஞான சாரம்சத்தைக் கண்டறிந்தவர். அந்தஞானத்தை அவர் தாம் எழுதிய கட்டுரைகளிலும் கதைகளிலும் வெளிப்படுத்தியவர்.

என்றும் நித்தியப் பேரானந்தப் பெரும் சுவர்க்க வாழ்வில் அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்போமாக.

-பேராசிரியர் சபா.ஜெயராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Late Mr. Rasaratnam emphasised the concept of selfless life

Late Mr. Rasaratnam had great vision on human life. He strongly believed in Hindu Philosophy. All his writings, essays and short stories reflected the great ideals of Hinduism.

According to him, the Hindu Philosophy is based on truth and non-violence. He believed that the part of Brahman is existing in every soul. The soul is called Athma or Athman

The spiritual goal of Hinduism is to become one with Brahma – the God. In his writings, he insisted on this goal.

In his speeches, he emphasised the concept of selfless life, working selflessly for the good of the society was his main objective.

During his lifetime, he followed:

(a) The path of Knowledge.
(b) The path of Meditation.
(c) The path of Devotion, i.e. Bakthi.
(d) The path of good work.

He had in-depth knowledge in Hindu Philosophy and Tamil literature.

He wrote stories based on Hindu Philosophy and ancient Tamil literature.

He deconstructed the ancient Tamil literary work Thirukkural and gave new interpretations and new meanings.

His criticism on life was based on Thurumuraigal He lives long in the minds of his friends and relatives.

**Prof. Saba Jayarajah**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன்

(தலைவர்-ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பளை,
தலைவர்-சிவபூமி அறக்கட்டளை இலங்கை,
இளைபாறிய அதிபர்-ஸ்கந்தவதோரயாக் கல்லூரி சுன்னாகம்)

## அவர்கள் வழங்கிய பிரார்த்தனையுரை

இணுவில் திருவூர் பெற்ற கல்விமான், சைவப் பெரியார் உயர்திரு.ஆ.இராசரத்தினம் ஐயா அவர்களின் பிரிவு குறித்து மிகவும் கவலையடைகிறேன். இலங்கை முழுவதுக்குமான பிரதிக் கணக்காளர் நாயகமாக உயர்பதவி வகித்த உத்தமரால் யாம் பெருமை பெற்றோம். தன் வாழ்நாள் முழுவதும் இறைவழிபாட்டிலும், இறை தொண்டிலும் அக்கறையுடன் வாழ்ந்த மூத்தவரை யாம் இழந்துவிட்டோம். பரராச சேகரப்பிள்ளையாரின் மீளா அடியவராகவும் கொழும்பு பம்பலப்பிட்டிப் பிள்ளையாரின் தொண்டனாகவும் விளங்கிய இப்பெரியாரின் உயர்பண்புகள் மறக்கமுடியாதவை. அமரர் அவர்களும் அவரது சகோதரன் குணரத்தினம் அவர்களும் இணுவில் வாழ் இளைய தலைமுறைக்கு கொழும்பில் வழிகாட்டிகாளக அன்று விளங்கியதை இன்றும் பலர் நன்றியோடு கூறுவர். உயர் பதவி வகித்த காலத்தில் ஞானங்நோக்குடையவராக விளங்கிய இப் பெரியாரை சிங்கள முஸ்லீம் மக்களும் மதித்தனர். நேர்மையான வழியில் வாழ்ந்து தன் கடமைகளை நிறைவேற்றியவர். அமரரின் பாரியார் நிர்வேலி கந்தசாமி கோவில் வளர்ச்சியில் அக்கறை கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். நல்ல பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்களின் சிறப்புக்களைக கண்டு பெருமைபட்ட நிலையில் அமைதியாக இறை அழைப்பை ஏற்றுச் சென்றுள்ளார் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எம் குல தெய்வமாகிய பரராச சேகரப்பிள்ளையாரையும், துர்க்கை அம்பாளையும் வேண்டி அமைகிறேன்

ஆறு.திருமுருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Gurupatham

**NALLAI THIRUGNANA SAMBANDAR ADHEENAM**

**Srilasri Swaminatha Desiga Gnanasambhantha Paramacharya Swamigal**
Gurumaha Sannithanam - Founder

**Srilasri Somasundara Desiga Gnanasambhantha Paramacharya Swamigal**
Gurumaha Sannithanam Chief Incumbant

Tele Phone: 021-222 2870 POINT PEDRO ROAD, NALLUR, JAFFNA, SRI LANKA. ....../....../200...


01-12-2015

திருவாளர் ஆ.இராசரத்தினம் அவர்கள் கொழும்பு சம்மாங்கோட்டார் மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நித்தியம் தொண்டு செய்து வருவதை நான் கொழும்பு செல்லும் வேளைகளில் கண்டு பாராட்டியுள்ளேன். அரச உயர் பதவியில் இருந்த போதும் மிகவும் பக்தி சிரத்தையுடன் சாதாரண தொண்டர் கோலத்தில் கொஞ்சமும் ஆடம்பரமில்லாமல் ஆலய விழாக்களில், சமய நிகழ்ச்சிகளில் கலந்து உதவுவதை எண்ணி மகிழ்ந்திருக்கிறேன். கொழும்பில் ஒரு தொகுதி சமய நூல்களை ஆதீனத்துக்கு அன்பளிப்புச் செய்தமை மறக்க முடியாத விடயம். ஆதீனக்குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் கூறியவாறு

"நோயுற்று அடராமல் நொந்து மனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பாவியேன் காயத்தை
ஒரு நொடியுள் நீக்கி ஒண்போரூர் ஐயா
நின் சீரடிக் கீழ் வைப்பாய் தெரிந்து"

என்ற திருப்போரூர் சந்நிதி பாராயணம் செய்தால் மரணம் அவ்வாறே சித்திக்கும் என்பது ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளது வாழ்க்கையில் நான் நேரில் அனுபவித்துள்ளேன். அன்பர் இராசரத்தினமும் அவரது தொண்டுக்கு கைமேல் பலன் என்பது நன்கு புலனாகின்றது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் குருநாதா துணை
ஓம் நாகப்ப சுவாமி துணை.

# புராதன குருநாதர் கோயில்
# PURATHANA KURUNATHAR KOYIL

மாசேரி - வரணி,
தென்மராட்சி,
யாழ்ப்பாணம்.
இலங்கை.
T.P :- 0775143946.

MASERI - VARANY,
THENMARADCHI,
JAFFNA,
SRI LANKA. 07/12/2015

ம்பரைத்தர்மகர்த்தா,
தம பூசகர் :-
ச் செல்வர்,
வைப்புலவர்,
ல சித்தாந்த பண்டிதர்,
ருளை அமுதன்,
ாந்த வித்தகர்,
நெறிச் செல்வர்,
அருள் வாசகர்,
சி.கா. கமலநாதன்
பி.ஏ. (சிறப்பு). எம்.ஏ.(யாழ்)

NERATION TRUSTEE,
IEF POOSAKAR :-
CHSELVAR,
VAPPULAVAR,
ASITHANTHA PANDITHAR,
LURAI AMUTHAN,
ANTHAVITHAKAR,
NERICHSELVAR,
RUVARULVASAKAR,
S.K.KAMALANATHAN.
B.A. (Hons) M.A. (Jaffna).

வங்கி க/கு இலக்கம் :-
* மக்கள் வங்கி, சாவகச்சேரி,
சேமிப்பு க/கு இல : 19991
* இலங்கை வங்கி, சாவகச்சேரி,
சேமிப்பு க/கு இல : 21190

## திருவழி நின்று உயர்வு பெற்ற உத்தம பெருந்தகை.

அமரர் ஆறுமுகம் - இராசரத்தினம் ஐயா அவர்கள் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுலகம் சென்ற புண்ணிய ஆத்மா. இவர்கள் எனது ஆத்மிக குரு அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவரின் சிஷ்யர் என்று உள்ளத்தில் உணர்ந்தவர். இவரை எம்முன் தொடர்பு படுத்தியவர் மீசாலை புராணிகரும், சப்பச்சிமாவடி சக்கரத்தாழ்வார் கோயில் தர்மகர்த்தாவுமான திருவாளர், தி. கணேசன் ஐயா அவர். இவரே அருட்கவி ஐயா எனக்கு குருவாக வாய்க்க வழிகாட்டியவர்தான். குருவின் பின்பு சிஷ்யர்களை இனங்கண்டு. இராசரத்தினம் ஐயா அவர்களை "தெய்வ மனப்பான்மை நிறைந்த இராசரத்தினம்" என அருட்கவி ஐயா தனது திருவாக்கால் போற்றியதை இப்போது நினைக்கும் போதும் பூரிப்பு ஏற்படுகிறது.

இதற்கேற்ப அமரர். ஆ. இராசரத்தினம் அவர்களின் விநய சிரைத் தினமும் தொழுது எழத் திரு நாட்டில் [illegible] ஆகார [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கப் பிள்ளையாரை தினமும் வழிபட்டு கொழும்பில் பல சமயப் பணிகள் செய்தார். உதவிக் கணக்காளர் நாயகமாக இருந்து பணிக்கு அணிகலமானார். யோகர் சுவாமிகளின் அருள் அநுபவத்தை நேசமொடு பிரச்சாரம் செய்தார். எழுத்துத் துறையில் விற்பன்னராக ஞானச்சுடர் விவேகி, தினகரன் போன்றவற்றில் எழுதி மக்களை நல்வழிப் படுத்தினார். ஞானச்சுடர் இவர் கடைசியாக எழுதிய கட்டுரை "வகுத்தான் வகுத்தவகை" என்பதாகும். கதம்பம் நூல் வெளி இவரின் மகிமையை பேசும் நிலை நிறுத்துகிறது. ஆன்மீகப் பணியுடன் இல் வாழ்க்கையிலும் இருந்து விளங்கி நன் மக்களைப் பெற்று உலகுக்கு அளித்தார். அவ்வகையில் மகன் ஸ்ரீதரன் பெரியவராகவும், மகள் சசிகலா கணக்காளராகவும் மிளிர்கின்றனர். மருமகன் சிரேஷ்ட [illegible] லண்டன் - ஒரே நகர மேயராக அரும் பணிபுரிந்து வெளிப்படுத்தினர். தக்கார் தகவிலர் தம் எச்சத்தால் காணப்படும் என்பது உண்மை. இவ்வாறு எல்லா வகையிலும் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து தனது 87 வது வயதில் பரிபூரணன் திருவடியுடன் கலந்து நெறி வழி வாழ்ந்த இவ்வாறாக எமக்கு அப்பர் சுவாமிகளின் திருவுருவமாக காட்சி தந்து கொண்டிருக்கும் திருவடிகளை வணங்குவோம்.

இங்ஙனம்.
ஸ்ரீகமலநாதன்.
விரிவுரையாளர்,
ஸ்ரீபாத தேசிய கல்வியியல்
கல்லூரி, பத்தனை

சிவத்திரு.சி.கா.கமலநாதன் ஐயா J.P
பிரதமபூசகர், பரம்பரைத்தர்மகர்த்தா
புராதன குருநாதர் கோயில்
மாசேரி-வரணி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை கிழக்கு
# சித்திரவேலாயுதர் ஆலயபரிபாலன சபை
Meesalai East
# SITHTHIRAVELAUTHAR TEMPLE TRUSTEE

மீசாலைகிழக்கு, மீசாலை. Meesalai East, Meesalai.

பதிவு இல/Reg No: HA/5/JA/1066 தலைவர் க. சண்முகலிங்கம் ........./..........201....

என்றும் என் நினைவில் ....

அரச பணியிலும் ஆன்மீக வழியிலும், ஆலய வழிபாட்டிலும் என்னை தோளோடு துணையாய் நின்று, மீசாலை பெரிய தோட்டம் திரு. ரி. கணேசன் [illegible] அவர்கள் [illegible]

[illegible]


[illegible]

க. சண்முகலிங்கம்
ஆயுள் கால [illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

# அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

பதிவு இல: HA /4/J/25 - 30.09.1960

யாழ். அலுவலகம்.
153, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில். சிறீலங்கா.
T.P: +940 212 223458

கொழும்பு அலுவலகம்.
21, இரத்தினகரா பிளேஸ்.
தெகிவளை. சிறீலங்கா.
T.P: 0777497100

தலைவர்
சைவப்புலவர்
மு.திருஞானசம்பந்தபிள்ளை

உப தலைவர்
சைவப்புலவர்
சா. தில்லைநாதன்
சைவப்புலவர்
சு.செல்லத்துரை

செயலாளர்
சைவப்புலவர்
க.நித்திய தசீதரன்

தேர்வுச்செயலாளர்
சைவப்புலவர்
சு. தேவமனோகரன்

பொருளாளர்
சைவப்புலவர்
சி.நந்தகுமார்

பிரசாரச்செயலாளர்கள்
சைவப்புலவர்.
செ.கந்தசத்தியதாசன்
திருமதி சி.சறோஜினிதேவி
திருமதி .ஞா.சிவானந்தஜோதி
செல்வி. ஞா. ஞானலோகேஸ்வரி
செ. நவநீதகுமார்
கி. வெள்ளைச்சாமி

உப செயலாளர்
சைவப்புலவர்
த.குமரன்

உபதேர்வுச் செயலாளர்
சைவப்புலவர்
ச. முகுந்தன்

இணைப்பாளர்
(புலம்பெயர் நாடுகள்)
செல்லத்துரை நாவரசன்
Tel: 00447956497291
email- saivapulavar@hotmail.com

201...................

அமரத்துவம் அடைந்த இராசரத்தினம்
அவர்கள் சைவமும் தமிழும் தழைத்
தோங்கும் இணுவையம்பதியில்
தோன்றியவர். ஓங்காரத்தின் உட்பொரு
ளாய்த் திருவுருவடிவில் முன்னவனாகி
னாய், ஞானக்குமாரனாய் விளங்கி,
அடியார்களுக்கெல்லாம் அருள்பாலித்து,
வேண்டுவார் வேண்டும் வரங்களை
ஈந்தருளாயிருக்கும் இணுவை
பரராசசேகரப் பிள்ளையார் ஆலயச்
சூழலில் பிறந்து வளர்ந்து, கோயில்
பிள்ளைப் பிள்ளையாக தனது இளமை
நாட்களைக் கழித்த இராசரத்தினம்
அவர்கள் சிறந்த கணக்காய்வுத்
திணைக்களத்தில் லிகிதராக ஆரம்
பத்தில் சேர்ந்து கொண்டவர்.
தன்னுடைய நேர்மை, கண்ணியம்,
கட்டுப்பாடு, நியாயத் தன்பாவம் பூண்டு
நடத்தைகள் இணைந்தவர் சேவையில் படிப்
படியான உயர்வுகளைப் பெற்றவர்.
கணக்காய்வுத் திணைக்களத்தில்
உயர்பதவியினைப் பெற்று மதிப்புடன்
யாவராலும் போற்றப்பட்டவர்.
கொழும்பு மாநகரத்தில் தனது சேவைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தினை முதுமையாக நிறைவு செய்தவர்.
கொழும்பு வெள்ளவத்தையில் நீண்டகாலம்
வாழ்ந்தமையால் வெள்ளவத்தை மாணிக்கப்
பிள்ளையார் ஆலயத்தைத் தனது சொந்த ஊர்ப்
பரராசசேகரப் பிள்ளையார் ஆலயமே
எனக்கருதி நாளும் தொழுதும் வழிபாடும்,
தொண்டுகளும் ஆற்றிவந்தவர். ஆலய திருத்
கூட்டுப் பிரார்த்தனை, திருவிழாக் காலத்
தொண்டுபல செய்வாருடன் சேர்ந்து பணியாற்றியும்,
புராணபடனம், விநாயகர் விரதம் போன்ற
நிகழ்வுகளிலும் ஏனையவர்க
ளையும் ஈடுபடச் செய்து தாமும் அயராது
தொண்டில் ஈடுபட்டவர்.
அடியிலன் கொழும்பு பம்பலப்பிட்டி திருக்
கன்னூர்யில் கற்பிக்கும் காலத்து அமரர்
அவர்களுடைய தொண்டுபடு செயற்பாடு
காணக்கிடைத்த இயந்திரத்தின்.
எவ்வொருக்கும் உள்ளம் உதவுபவராகவும்
ஆழ்ந்த தெய்வ பக்தி கொண்டவராகவும் விளங்கிய அமரர் இராசரத்தினம்
பவராகவும் விளங்கிய அமரர் என்றும் வழிகாட்டவும்
அவர்களின் நினைவு என்றும் வழிகாட்டவும்
அவரின் ஆத்மா விநாயகப் பெருமான் திருவடி
யில் பேரானந்தப் பேறடையவும் பிரார்த்தி
க்கின்றோம்.

சைவப்புலவர். மு. திருஞானசுந்தரம்பிள்ளை
தலைவர்.
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

சைவப்புலவர் மு. திருஞானசுந்தரம்பிள்ளை
153, கே.கே.எஸ். வீதி
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரின் பிரிவால் துயருறும் அன்புத் தம்பி.....

போவல்ல சித்தி பிறங்கு நற்புத்தி பெருகுநில நீர்வல்ல செல்வம் நிறைமைந்தர் அன்பு நெடிய தவந்தேர் வல்ல முத்தி திடமான சிந்தை சிறக்க வைக்கும் சீர் பம்பலப்பிட்டி திகழும் கணேசன் திருவடியே

சகலசெல்வங்களும் நிறைந்த இலங்காபுரியின் சிரசு எனப் போற்றும் யாழ்ப்பாணத்தின் வடபால் கல்வி, செல்வம், சைவம், தமிழ் சிறநது ஓங்கும் சரித்திரப் பிரசித்தி பெற்ற கம்பீரத் தோற்றத்துடன் அருள் மழை பொழியும் பரராச சேகரப் பிள்ளையார் ஆலயமும் கந்தசாமி ஆலயமும் சிறந்த கல்விமான்களும் உதித்த ஊர் தான் இனுவில்.

இவ்வூரில் சைவ வேளான் குலத்தில் 1928ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதலாந் திகதி இவர் உதித்தார். விளையும் பயிரை முளையில் தெரியும் என்பதற்கு அமைய இளம் பிராயம் தொடக்கம் இறைவன் பாத கமலங்களை அடையும் வரை சகல செல்வங்களுடனும் சீரும் சிறப்புடனும் வாழ்ந்த பெரியார். கடந்த 30 ஆண்டுகள் நானும் அவரும் பழகி வந்தோம். எனக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாய் இருந்து வந்தார்.

ஏறத்தாள ஐம்பது ஆண்டுகள் மாணிக்க விநாயகரே தனது முழுமுதற் கடவுளாகக் கொண்டு இன்று வரை அவரின் தொண்டனாகவே இருந்து வந்தார். இவர் அதிகாலை நான்கு மணிக்கு ஆலயத்தை வந்தடைந்து ஆலயத்தின் சகல தொண்டுகளையும் செய்து வந்தார். ஆலய வளர்ச்சிக்குத் தன்னாலான உதவிகளைச் செய்து வந்தார். காலை மாலை தவறாது ஆலயத்தில் நிற்பார். எவரிடமும் அன்பாகவும் அமைதியாகவும் நடந்து கொள்வார். இவர் சொல்லும் வார்த்தைகள் யாவும் தெய்வ வார்த்தைகளாக அமையும். இவர் யோக சுவாமிகளின் பெருந்தொண்டனாகவும் இருந்து வந்தார். இவர் சமய பிரசாரங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர். எத்தனையோ கஷ்டப்பட்ட பிள்ளைகளுக்கு கல்வி பயிலுவதற்கு பல வழிகளிலும் உதவி செய்தவர். மாணிக்கப் பிள்ளையாரின் ஆலய ஓதுவாராகவும் பல காலங்கள் தொண்டாற்றியுள்ளார்.

விநாயகப் படிப்பு ஸ்கந்த சஷ்டிப் படிப்பு இவைகளை மாணிக்க விநாயகர் ஆலயத்தில் திறம்பட நடாத்தி வந்தவர். இவர் அன்று முதல் இறுதி வரை காலமும் வைரப் பெருமானுக்குக் காலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையும் தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை வைத்துப் பூசித்து வந்தார்.

லண்டன் சென்றும் அப்பணியைத் தன் அன்பர்பர்கள் மூலம் செய்து வந்தவர். மாணிக்க விநாயகர் ஆலய நிர்வாகத்தினர் இவர் மீது தனி மதிப்பும் மரியாதையும் அன்பும் வைத்துள்ளனர். இவரின் உத்தியோக உயர்ச்சிக்கும் நோய் நொடி இல்லாத வாழ்வுக்கும் குடும்பத்தினது சீரும் சிறப்பும் பெற்று சகல செல்வங்களுடனும் வாழ வைத்தது மாணிக்க விநாயகர் திருவருள் தான். எங்களுக் கெல்லாம் நல்நிலை காட்டி நல்நியில் வைத்த பெரும் மகான். இவர் எங்களையெல்லாம் தவிக்க விட்டு விநாயகருடைய பாதங்களை அடைந்து விட்டார். இவரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல மாணிக்க விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

அவர் பிரிவால் துயருறும் அன்புத் தம்பி
Dr.க.சிவராஜா
ஓதுவார் மூர்த்தி, பம்பலப்பிட்டி மாணிக்க
விநாயக ஆலயம், பம்பலப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.இராசரத்தினம் அவர்களும்
## பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலய பிரதமகுருக்கள்
## சிவ ஸ்ரீ பா.சித்சபேச குருக்கள் (மணி ஐயா)





## திரு.இராசரத்தினம் அவர்களின் நண்பர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.இராசரத்தினம் அவர்கள் சொற்பொழிவு
பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் என்னுடன்.....

எனது நன்பரும் ஓய்வு பெற்ற பிரதிக் கணக்காளர் நாயகமுமாகிய திரு ஆறுமுகம் இராசரத்தினம் அவர்கள் கடந்த 13-11-2015 அன்று இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து மிகவும் கவலையடைந்தேன்.

1960ம் ஆண்டு கொழும்பில் அரச உத்தியோகத்தராக கடமையாற்ற தொடங்கிய காலத்தில் அன்னாருடன் ஏற்பட்ட நட்பு அவர் இறைபதம் எய்துமட்டும் தொடர்ந்து இருந்தது.

1951ம் ஆண்டு சாதாரண லிகிதராக அரச உத்தியோகத்தில் இணைந்த அவர் தனது கல்வித்தகமையினால் படிப்படியாக முன்னேறி பிரதி கணக்காளர் நாயகமாக பதவி உயர்வு பெற்றார்.

நான் ஓய்வு பெற்ற பின்பு எனக்கு பெற்றுக் கொள்வதற்கு மிகவும் கஷ்டமாக இருந்த 06 மாத சம்பளத்தை எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த பெற்றுத் தந்தமையை இன்று நான் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

அமரரது முதலாவது பெண் பிள்ளை சசிகலா பிறந்து ஏறத்தாழ 12 ஆண்டுகளின் பின் ஒரு பெண்மகளையும் ஒரு ஆண்மகனையும் புத்திரர்களாக பெற்று அவர்கள் வாழ்ந்து உயரப் பாடுபட்டவர். அத்துடன் அவரது மூத்தமகள் சசிகலா ஒரு கணக்காளராகவும் மருமகள் பாபா சுரேஸ் கிருஷ்ணா Harrow நகர மேயராகவும் பணிபுரிகின்றமை கண்டு களித்தவர்.

சிறுவயதிலிருந்தே இறைபக்தியுடையவராக இருந்த இவர் இளமைக்காலத்தில் இனுவில் அருள்மிகு பரராஜசேகரப் பிள்ளையாரையும் தனது உத்தியோக காலத்தில் பம்பலப்பிட்டி அருள்மிகு சம்மாங்கோட்டார் மாணிகக்க விநாயகரையும் நித்திய வழிபாட்டுத் தெய்வமாக வரித்துக் கொண்டவர். சம்மாங்கோட்டு விநாயகர் ஆலயத்தில் கந்தசஷ்டி, நவராத்திரி, பிள்ளையார் கதை போன்ற உற்சவங்களை ஆரம்பித்து அவ்விழாக்களுக்கு உபயகாரர்களையும் ஒழுங்கு செய்து கொடுத்து இன்று வரை அவ்விழாக்கள் சிறப்புற நடைபெற வைத்த பெருமை அன்னாரையே சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமரர் அவர்களை ஒரு ஆன்மீகவாதியாய், சமயப்பற்றாளனாய், சமூக ஆர்வலராய், சமய சொற்பொழிவாளனாய் பல படிகளில் நான் அறிந்துள்ளேன்.

ஏறத்தாள அரை நூற்றாண்டுக்கு மேலாக நல்லுறவைக் கொண்டிருந்த ஒரு நண்பனின் இழப்பு எனக்கு வேதனையாக இருப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கிறேன்.


சி.கணேசன்
பெரியதோட்டம்
மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mr. Rasarathinam
# at
# ELECTRICAL AUDIT BRANCH - COLOMBO
# in 1954



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிது.

கடந்த நாற்பது ஆண்டு காலமாக நானும் அமரர் இராஜரட்னம் ஐயாவும் அன்பாக பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவர் ஒரு கல்விமான் பண்பாளர். அரச உத்தியோகம் வகித்தவர்.அவர் ஒரு சாதாரண தொண்டனாகவே இருந்து வந்தார். இவர் அதிகாலை முதல் காரியாலயம் செல்லும் வரை மாணிக்க விநாயகரே தஞ்சம் என்று தொண்டாற்றி வந்தார். மாலையிலும் அதே போல் செய்து வந்தார். அமரர் அவர்கள் எங்கள் ஆலய வளர்ச்சியில் முன்னின்று உழைத்த ஒருவர். ஏங்களுடைய நிர்வாகத்தினர் அவர் மேல் அளப்பரிய அன்பும் மதிப்பும் கொண்டு இருந்தார்கள். ஆலயத்தில் தொண்டு மாத்திரம் அல்ல பல நூல்களையும் வெளியிட்டு உள்ளார். அவரைப்போல மனம் கோணாமல் எல்லோரையும் அன்பாகவும் பண்பாகவும் நேசிக்கும் ஒரு தொண்டரை காண்பது மிக மிக அரிது. அவர் சதா மாணிக்க விநாயகரே தஞ்சம் என்று சீரும் சிறப்புடனும் சகல செல்வங்களுடனும் வாழ்ந்த பெரியார். இவர் மறைவு எங்களுக்கும் பெரும் இழப்பு ஆகும். அவர் ஆத்மா சாந்தியடைய சம்மாங்கோட்டார் மாணிக்க விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

அ.மாணிக்கவாசகர்
அறங்காவலர்சபைத் தலைவர்
சம்மாங்கோட்டார் மாணிக்க
விநாயகர் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறக்காத நினைவுகள்

இருக்கும்போது எங்கள் இதயத்தை அணைத்து, இல்லாதபோது எங்கள் இமைகளை நனைக்கும் ஒரு மனிதராக, என் மனதோடு மௌனமாக வாழ்ந்து கொண்டிருக்கும் அமரர் ஆறுமுகம் இராசரத்தினம் அவர்களை நினைத்துப் பார்க்கிறேன்.

தான் வாழ்கின்ற காலத்தில் தன்னையும், தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தையும் ஓர் அங்குலமாவது உயர்த்திக் காட்டுகின்ற உன்னதமான மனிதர்கள்தான் நினைவுகளில் வாழ்கிறார்கள். அப்படியானவர்கள் வரிசையில் அந்தப் பெரியாரும் ஒருவர்!

நல்ல கணவனாகவும், தந்தையாகவும், உற்றவர்களை உள்ளன்போடு நேசிக்கும் அன்பானவராவும், இலங்கையில் கடமை தவறாத அதி உயர் பதவி வகித்த ஒரு தமிழராகவும் வலம் வந்தார். ஆன்மீகத்தோடு இரண்டறக் கலந்து இறைவனடிக்குத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தார்.

தாயகத்திலிருந்து லண்டனுக்கு அவர், தன் பிள்ளைகளுடன் வந்து சேர்ந்த பின்னர்தான், அவரை நேரில் பார்த்து, நெருங்கிப் பழகுகின்ற பெரு வாய்ப்புக்கிடைத்தது.

என் நெஞ்சுக்கு நெருக்கமாக வாழும் சுரேஷ் கிருஷ்ணா- சசி தம்பதிகள் மூலமாகத்தான் அவரைப் பற்றி நிறையளவு அறிந்து கொண்டிருக்கிறேன். அவர் மகள் சசி தன் தந்தையைப் பற்றி அடிக்கடி சொல்வார். பெரியவரின் மனதுக்குப் பிடித்தவரான, பெறாத மகளாக சிறுவயதிலிருந்து வாழ்ந்த, பிள்ளை மாஸ்டர் மனைவி ஞானாவும் அவர் பெருங்குணங்களைப் பற்றிக் கூறக் கேட்டிருக்கிறேன். இவைகள் எல்லாம் லண்டனுக்கு வருவதற்கு முதலே அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தை அதிகரித்தது.

அவர் லண்டனுக்கு வந்து சேர்ந்த பின்னர் அவருடன் பேசிப் பழக முடிந்தது என்பதை விட அவருடைய முக்கியமான எழுத்துப் பணிக்கு ஓரளவாவது உதவ முடிந்தது என்பது எனக்குள்ளே உள்ள ஒரு பெரும் ஆறுதல்.

அவர்போனில் பேசுவார்; தபால் மூலம் தன் கட்டுரைகளை அனுப்புவார்; கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வார். கடைசிக் காலத்தில் சசி மூலமாக மெயிலிலும் அனுப்பி வைத்திருக்கிறார். கடைசியாக அவர் அனுப்பி வைத்திருந்த கட்டுரை ஒன்று, பிரசுரிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, அவர் இறைவனடி அடைந்த செய்தி என்னை அழ வைத்துவிட்டது!

சுரேஷ்-சசி கலந்து கொண்கின்ற வைபவங்களுக்கு அனேகமாக நான் செல்வதுண்டு. அந்தத் தருணங்களில் எல்லாம் பெரியவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்து பேசுவேன். 'புதினம்' இதழில் வெளி வருகின்ற மற்றைய ஆக்கங்களைப் பற்றி எல்லாம் மிகத் தெளிவான எண்ணங்களைச் சொல்வார். சில சந்தர்ப்பங்களில், அவரை நிகழ்ச்சிகளின்போது கைகளைப் பிடித்து வெளியே அழைத்துச் சென்ற நினைவுகள் நெஞ்சை வாட்டுகிறது. தந்தையாக நினைத்திருக்கிறேன்.

ஹரோ கவுன்சில் மண்டபத்தில் அவருடைய 'கதம்பம்' நூல் வெளியீட்டு விழா ஒரு அரச மண்டபத்தில் நடந்த பெரு விழாவாக நடந்தது. அவரது வாழ்வில் அவர் பலவற்றைச் சந்தித்திருந்தாலும், லண்டனில் தனக்கு அளிக்கப்பட்ட அந்தக் கௌரவித்தினால் மனம் நிறையப் பெற்றவராகக் காணப்பட்டார். அவர் எழுத்துகளுக்கு பெரும் அங்கீகாரத்தையும், மதிப்பையும் அவரது பிள்ளைகள் தேடிக் கொடுத்தார்கள்.

அந்த விழா பற்றிய விபரமான தகவல்களைப் 'புதினம்' இதழில் பார்த்து, மகிழ்ச்சியில் அவர் குறிப்பிட்ட அந்த நன்றிப் பெருக்காற்றை இப்போதும் உயர்வாகவே மதிக்கிறேன்!

அவரது மகன் சிறீசுதன் தன் தந்தையை கடைசிவரை கண்கலங்காது பராமரித்தார். சங்கவி மனம் கோணாது மகளாக பணிவிடை செய்தார். மகள்கள் சசி, தயா தந்தையை உயிராக நேசித்தார்கள். மருமக்கள் சுரேஷ், மனோ மகன்களாக வாழ்ந்தார்கள்.

ஆம்; நெஞ்சிருக்கும் வரை அவர் என் நினைவில் வாழ்வார்!

**ஈ.கே. ராஜகோபால்**
*(ஆசிரியர், புதினம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோஜா மலர்கள் மத்தியில் ராசா

ஆண்டவனின் மலர்ப் பூங்கா

அங்குள்ள மலர்களை ரசித்தபடி ஆண்டவன் நடந்துகொண்டிருக்கிறார்.

அழகிய அந்த மலர்ச் செடிகளின் நடுவில் ஆண்டவன் ஒரு வெற்றிடத்தை கண்டுகொள்கிறார்.

திடீரென நிற்கிறார்.

கீழே குனிந்து, பூவுலகத்தைப் பார்க்கிறார்.

ராசாவின் அழகான அன்பான பக்தி சொட்டும் முகத்தை ஆண்டவன் கவனிக்கிறார்.

ராசாவின் தோள்களில் கையைப் போட்டு கனிவுடன்:

"ராசா வந்துவிடு என்னோடு,

நீ பட்டதுயர்களையும் வலிகளையும் நான் நன்கு அறிவேன். மண்ணுலகில் இனி உனக்கு சுகம் கிடைக்காது. என்னுலகில் என் மலர் பூங்காவில் என் அருகில் நீ சந்தோஷமாக இருக்கலாம்"

என்று ஆண்டவன் சொல்கிறார். தன் அற்புத மலர் பூங்காவுக்கு அழைத்துச் செல்கிறார்.

ராசா ஆண்டவனின் அழைப்பை ஏற்று நிரந்தர துயிலில் இருந்த நிலையில், அவரது முகத்தில் நிம்மதி தெரிந்தது.

எல்லாப் பிணிகளிலிருந்தும் விடுதலை தெரிந்தது.

ராசாவை இழந்த அவரது குடும்பத்தினர் துடித்துப் போனார்கள்.

அந்தக் குடும்பத்தினர் ஒவ்வொருவர் இதயங்களில் இருந்தும், ஒரு பகுதியை ராசா தன்னுடன் எடுத்துச் செல்கின்றார்.

என்னைப் போன்ற நண்பர்களின் நெஞ்சில்,


இனிமையான பல நினைவுகளை ராசா

விட்டுச் சென்றிருக்கின்றார்

விமல் சொக்கநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.திருமதி.இராசரத்தினம் அவர்களின் குடும்பம்
மகன் - ஸ்ரீசுதன், மகள் - ஸ்ரீதயாபரி
மூத்தமகள் - சசிகலா, மாமியார் - திருமதி.பொன்னம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.இராசரத்தினம் அவர்களின்
பிள்ளைகள் - மருமக்கள் - பேரப்பிள்ளைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**LONDON BOROUGH OF HARROW**

*THE WORSHIPFUL THE MAYOR*

*COUNCILLOR KRISHNA SURESH*

*THE MAYOR'S PARLOUR*
*CIVIC CENTRE*
*HARROW, MIDDLESEX, HA1 2XY*
*Tel: 020 8424 1232*
*Fax: 020 8420 9226*
*Email: mayor@harrow.gov.uk*



**The Worshipful The Mayor of Harrow**
**Councillor Krishna Suresh**


I take this opportunity to thank everyone for attending today and we want you to know that your presence is very much valued and appreciated.

Thank you on behalf of all the family!


**December 2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org